[2013 மே 9

பிற்பகல் 12-25

(ஈ) அவை உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உரிமைக் குழு. அவை உரிமைக் குழுவிற்கு 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 2013-2014 ஆம் நிதியாண்டிற்குரிய அவை உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவைத் தேர்ந்தெடுக்கும்"*
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

8. அறிவிப்பு

பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல் – கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு* (Committee on Estimates), *பொதுக் கணக்குக் குழு* (Committee on Public Accounts), *பொது நிறுவனங்கள் குழு* (Committee on Public Undertakings), *அவை உரிமைக் குழு* (Committee on Privileges) *ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை (10-5-2013) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.*

2013 மே 9] [பேரவைத் தலைவர்]

வேட்புத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள், 13-5-2013 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 14-5-2013 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

9. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 47 – இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013-2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 47 - இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி,

“இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.91,17,18,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.”
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2407, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2688, திரு. ப. டில்லி பாபு.